திட்ட மதிப்பீடு எல்லாம் தயார் செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. இரண்டு பேரூராட்சிகளையும் சேர்த்து 65 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 554 வீடுகளின் பணிகள் முன்னேற்றத்தில் இருக்கின்றன என்பதையும், இதற்கான திட்டச் செலவினம் 3 கோடியே 89 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

93—

புதைவடங்கள்

***12632—திரு. இ. கருணாநிதி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *பல்லாவரம் தொகுதியில் மேலே செல்லும் மின்கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியில் மேலே செல்லும் மின்கம்பிகளை புதைவடத் தடமாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். தாம்பரம் கோட்டத்தில் மொத்தம் 311 கிலோ மீட்டர் நீளத்திற்கு உயர் மின்னழுத்த கம்பிகள் உள்ளன. உறுப்பினர் தொகுதியில் 102 கிலோ மீட்டர் தூரத்திற்கு இருக்கின்றன. அதேபோல, தாழ்வழுத்த மின்கம்பிகள் தாம்பரம் கோட்டத்தில் 918 கிலோ மீட்டர் நீளத்திற்கு இருக்கின்றன. உறுப்பினர் தொகுதியில் 435 கிலோ மீட்டர் தூரத்திற்கு இருக்கின்றன.* (குறுக்கீடு) *தாம்பரம் எல்லாம்*

சேர்த்துத்தான். தாம்பரம் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் புதைவடத் தடமாக மாற்ற வேண்டுமென்பதற்காக 352 கோடி ரூபாய் மதிப்பீடு அளவில் டெண்டர் விடப்பட்டிருக்கின்றது. இப்போது கள ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கூடிய விரைவில் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மின்கம்பங்கள் நடப்பட்டு, தாழ்வழுத்த மற்றும் உயர் மின்னழுத்த கம்பிகள் மூலமாக இரு மின்பாதைகளில் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அனைத்து மின் கம்பங்கள் மற்றும் மின் கம்பிகளும் சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டு பழமை வாய்ந்தவையாக இருக்கின்றன. மழைக் காலங்களில் குறைந்த வேகத்தில் காற்று வீசினாலும், மின் கம்பிகள் அறுந்து விழும் சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால், சீரான மின் விநியோகம் தடைபடுகிறது. மழையாலும், பெருங்காற்றினாலும் மின் கம்பங்கள் அடியோடு சாயும் நிலை ஏற்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக வந்த 'வர்தா' புயலினால், இதுபோன்ற மின் கம்பங்களில் 250 மின் கம்பங்கள் பாதிப்படைந்தன. மின் கம்பிகள் அறுந்து விழுவதனாலும், மின் கம்பங்கள் சாய்ந்து விடுவதனாலும், மனிதர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற சூழ்நிலை உள்ளது. மேலும், மரக் கிளைகள் முறிந்து விழுவதனாலும், மரக் கிளைகள் கம்பிக்குள் ஊடுருவிச் செல்வதாலும், மின் கம்பிகள் ஒன்றோடொன்று இணைந்து உரசுவதாலும் short circuit ஏற்பட்டு, வீடுகளிலுள்ள உபகரணங்களான டி.வி., கிரைண்டர், ஃபிரிட்ஜ் போன்றவற்றில் பழுது ஏற்படுகின்றது. மேலும், மின் கம்பிகள் அறுந்து, உயர்மின்னழுத்தம்-high voltage ஏற்பட்டு பல இடங்களில் மின் உபகரணங்களினால் விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, பல்லாவரம் தொகுதியில் பெருகியுள்ள 8 இலட்சம் மக்கள் தொகையைக் கணக்கில்கொண்டு, மின் விபத்துகளைத் தடுக்க, சீரான மின்னோட்டம் வழங்கும் பொருட்டு, எனது தொகுதிக்குட்பட்ட பகுதிகளுக்கு மின் விநியோகத்தை புதைவடமாக, underground cable system ஆக மாண்புமிகு அமைச்சர்

2019 ஜுலை 12]

அவர்கள் மாற்றித் தருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், இதுபோன்று புயல் காலங்களில் பாதிப்பு ஏற்படுவதன் காரணமாகவும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்று குறுகிய வீதிகளாக இருக்கின்ற காரணத்தாலும் விபத்துகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்ற காரணத்திற்காகத்தான், புதைவடத் தடமாக மாற்றுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்தபோதே ஆணையிடப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பொழுது சென்னை மாநகரை, அதாவது* added villages–*ஐயும் சேர்த்து, பெருநகர சென்னை மற்றும் சென்னை புறநகர் பகுதிகள் ஆகியவற்றை 8 தொகுப்புகளாகப் பிரித்திருக்கின்றோம். மொத்த உயரழுத்த மின் கம்பிகள் மட்டும் 1,280 கிலோ மீட்டர் தூரத்திற்கும், தாழ்வழுத்த மின் கம்பிகள் 5,251 கிலோ மீட்டர் தூரத்திற்கும் உள்ளன. அவற்றைப் புதைவடத் தடங்களாக மாற்ற வேண்டுமென்பதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, 2567 கோடி ரூபாய் செலவிலே அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று நான் ஏற்கெனவே சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறேன். தற்போது, அந்தத் திட்டத்தைப் படிப்படியாக நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத்தான், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்லாவரம் பகுதியிலே புதைவடத் தடம் அமைக்க வேண்டும் என்று கேட்பதற்கு முன்பாகவே, அதற்கான டெண்டர் விடப்பட்டுள்ளது. அந்தப் பணிகளைக் கூடிய விரைவில் தொடங்கவிருக்கின்றோம்.*

அதேபோன்று, சென்னை மாநகரம் முழுவதுமாக, மொத்தமுள்ள 6,531 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மின்கம்பிகள் அனைத்தையும் 2021 ஆம் ஆண்டுக்குள் முழுமையாக புதைவடத் தடமாக மாற்றுவதற்குண்டான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது என்பதை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1½ ஆண்டுகளுக்கு முன்பாக என்னுடைய தொகுதியிலுள்ள அஸ்தினாபுரம், அனகாபுத்தூர் ஆகிய பகுதிகளில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு 'இடத்தைத் தேர்வு செய்து கொடுங்கள்' என்று கேட்டார்கள். நானும் அவற்றுக்குத் தேவையான இடங்களைத் தேர்வு செய்து கொடுத்து, 1½ ஆண்டு காலம் ஆகிவிட்டது. தற்போது, கீழ்க்கட்டளை பகுதியிலும், அதேபோன்று மின் தட்டுப்பாடு ஏற்படுகிறது. அங்கேயும் அதற்கான ஓர் இடத்தை நான் தேர்வு செய்திருக்கின்றேன். ஆகவே, 1½ ஆண்டு காலம் கிடப்பில் உள்ள துணை மின் நிலையங்களை அமைப்பதற்கான கோப்பு, வருவாய்த் துறை மூலமாக* guideline value *போட்டு அனுப்புவதற்கு தாமதம் ஆகிறது. மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில் கோப்புகளை அனுப்பிவிடுகிறது. ஆனால், வருவாய்த் துறை உடனடியாக அந்தக் கோப்பினை அனுப்புவதற்கான பணிகளை முடிக்கவில்லை. ஆகவே, அந்தப் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோன்று, கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பாக இதே சட்டமன்றத்தில் விதி 110–ன்கீழ் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பல்லாவரத்தில் ஒரு புதிய கோட்டம் ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்தப் பணியும் நிலுவையிலுள்ளது. எனவே, பல்லாவரத்தில் புதிய கோட்டம் ஒன்றை உருவாக்கிட வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அஸ்தினாபுரம், அனகாபுத்தூர் ஆகிய இரண்டு இடங்களில் துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான இடங்களைத் தேர்வு செய்து கொடுத்தார்கள். இடங்களைத் தேர்வு செய்த பிறகு, தாசில்தார்,

அதற்கான விலை மதிப்பினைக் குறிப்பிட்டு, கோப்பினை டி.ஆர்.ஓ.–க்கு அனுப்புவதற்குப் பதிலாக, நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பிவிட்டார்கள். மீண்டும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், கோப்பினை டி.ஆர்.ஓ. மூலமாக அனுப்பி வைக்குமாறு கேட்டு திருப்பியனுப்பியிருக்கிறார். நாங்களும் அங்கே ஓய்வு பெற்ற வருவாய்த் துறை அதிகாரி ஒருவரை நியமித்து, இப்பொழுது அந்தப் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். கோப்புகளை ஆய்வு செய்து, விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். அந்தக் கோப்புகள் வந்தவுடன் உடனடியாக அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, விதி 110–ன்கீழ் பல்லாவரத்தில் புதிய கோட்டம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கான கோப்பு மின் வாரியத்திலுள்ள தலைமைப் பொறியாளர் அவர்களிடத்திலே இருக்கிறது. அடுத்த வாரத்திற்குள் அதற்கான அனுமதியைப் பெற்று, கூடிய விரைவில் புதிய கோட்டம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, LT and HT எனப்படுகின்ற குறைந்தழுத்த மற்றும் உயரழுத்த மின் கம்பிகளை புதைவடக் கம்பிகளாக மாற்றுவது குறித்து, இந்த அவையிலே 5–8–2016, 19–7–2017, 21–3–2018 மற்றும் 5–1–2019 ஆகிய தேதிகளில் நான் வலியுறுத்தியிருக்கிறேன். இதற்குக் காரணம் மின் கசிவினால், மழைக் காலங்களில் மின் கம்பிகள் அறுந்து விழுந்துவிடுகின்றன. அதனால், பல விபத்துகள், உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. அதையும் இந்த அவையிலே நான் பலமுறை சுட்டிக்காட்டியிருக்கிறேன். கொளத்தூர் பகுதியில், தற்போது 93 கோடி ரூபாயில் 270 கிலோ மீட்டர் தூரத்திற்கு LT and HT மின் கம்பிகளை புதைவடக் கம்பிகளாக மாற்றுவதற்கான பணிகளைத் துவங்கியிருக்கிறார்கள். அதேபோன்று, பெரம்பூர் பகுதியில் 595

கிலோ மீட்டர் தூரத்திற்கு LT and HT மின் கம்பிகளை 209 கோடி ரூபாய் அளவிற்கு புதைவடக் கம்பிகளாக மாற்றுவதற்கான பணிகளையும் துவங்கியிருக்கிறார்கள். இந்தப் பணிகள் நிறைவு பெறுவதற்கு 2 ஆண்டு காலம் ஆகும் என்கின்ற செய்தி எனக்கு வந்திருக்கிறது. ஆகவே, இந்தப் பணிகளை 2 ஆண்டு காலத்திற்கு நீட்டிக்காமல், இந்த ஆண்டிற்குள் முடிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்குக் காரணம், பருவமழை மற்றும் எதிர்பாராமல் மின் கம்பிகள் அறுந்து விழக்கூடிய சூழ்நிலை ஏற்படும்போது, பல விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, இந்தப் பணிகளை விரைந்து முடிக்க அரசு முன்வர வேண்டும்.

இதே அவையிலே, மாண்புமிகுமின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், 23–6–2017 அன்று 2,567 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இப்பொழுதுகூட பதில் சொல்கிறபோது, இதைக் குறிப்பிட்டு, மத்திய அரசிடமிருந்து நிதி பெறப்பட்டு, அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இங்கே தெரிவித்திருக்கிறார்கள்

முற்பகல் 10–20

நான் கேட்பது, கொளத்தூர் தொகுதி, பெரம்பூர் வட்டம்போல, தமிழ்நாடு முழுவதும் உள்ள உயர் மின்னழுத்த மற்றும் குறைந்த மின்னழுத்தக் கம்பிகளை மாற்றுவதற்கான பணிகள் ரூ.2,567 கோடி ரூபாயில் துவங்கப்பட்டிருக்கிறதா? அப்படி துவங்கப்பட்டிருந்தால் குறைந்த கால அளவுக்குள் இந்தப் பணிகளை நிறைவேற்றி, விபத்துகளை நீங்கள் தடுக்க வேண்டும். அதற்கு விரைந்து இந்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று நான் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியபடி அந்தப் பணிகளுக்கு டெண்டர் விடுவதில் காலதாமதமாகிவிட்டது. முதலில் புதைவடத் தடமாக, அதாவது பூமியில் புதைத்துப் போடுவதற்குண்டான டெண்டரை விட்டோம்.

அதில் பல துறைகளினுடைய அனுமதியைப் பெறுவதிலே காலதாமதம் ஆகிவிட்டது. அதனால், புதிய முறையிலே, trenchless என்று சொல்லக்கூடிய, அப்படியே துளை போட்டுக் கொண்டு செல்லக்கூடிய வகையில் செய்வதற்கு டெண்டர் விடப்பட்டு இப்போது கொளத்தூர் பகுதியில் அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இதுகாறும் 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு பணிகள் முடிந்திருக்கின்றன. கொளத்தூர் பகுதியில் மட்டும் இன்னும் ஓராண்டு காலத்திற்குள் அந்தப் பணிகள் முடிந்துவிடும். மற்ற பகுதிகளில் 2 ஆண்டுக் காலம் ஆகிவிடும். ஏனென்று சொன்னால், பல பகுதிகளிலே இரவு நேரங்களில்தான் அந்தப் பணிகளை மேற்கொள்ள முடிகிறது. பகல் நேரங்களிலே செய்ய முடியவில்லை. அதனால்தான் காலதாமதம் ஆகிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, 2,567 கோடி ரூபாய் என்பது சென்னை பெருநகர் மாநகரத்திற்கு மட்டும். தமிழ்நாடு முழுவதற்கும் இல்லை. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, 6,531 கிலோ மீட்டர் அளவுக்கு உயர் மின்னழுத்த மற்றும் தாழ்வு மின்னழுத்தக் கம்பிகளை புதைவடத் தடமாக போடவேண்டும். மக்களின் பாதுகாப்பு முக்கியம் என்பதை அறிந்துதான் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு இந்தப் பணியை செய்துகொண்டிருக்கிறது.

அதேபோல, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நேர்மை நகரிலே துணை மின் நிலையத்தை அமைக்க வேண்டுமென்று ஏற்கெனவே கேட்டிருந்தார்கள். இப்பொழுது 90 சதவிகித பணிகள் முடிவு பெற்றிருக்கின்றன. இன்னும் ஒன்றிரண்டு மாதங்களில் அந்தப் பணிகள் முடிந்துவிடும். அதேபோல, கணேஷ் நகர் பகுதியைப் பொறுத்தவரையில், 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு டெண்டர் கோரப்பட்டிருக்கின்றது. அந்தப் பணிகளையும் விரைந்து முடிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.